# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 10426/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

| | |
|---|---|
| **முன்னிலை** | **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**<br>**மாநில தகவல் ஆணையர்.** |
| **மனுதாரர்:** | திரு ஆர் பாலகிருஷ்ணன்<br>220, ரோடு தெரு, நம்பேடு கிராமம் & அஞ்சல்<br>போலூர் தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம். |
| **பொது அதிகார அமைப்பு:** | பொதுத் தகவல் அலுவலர்<br>கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்<br>திருவண்ணாமலை.<br><br>பொதுத் தகவல் அலுவலர்<br>காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்<br>திருவண்ணாமலை. |

***

மனுதாரர் திரு ஆர் பாலகிருஷ்ணனும், பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் அவர்களும் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசார**ணைக்கு வந்திருந்தனர்.**

மனுதாரர் 4.3.09 அன்று 2 இனங்களில் 12 உட்பிரிவுகளில் தகவல்கள் கேட்டு மனு செய்துள்ளார். மனுதாரருக்கு 3.4.09 அன்று தகவல்கள் தரப்பட்டுள்ளன. மனுதாரருக்கு முழுத் தகவல்கள் கிடைக்கவில்லை என்று 6.4..09 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் ஒரு சில தகவல்கள் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார். இது குறித்து ஒவ்வொரு இனமாக உட்பிரிவு வாரியாக விசாரிக்கப்பட்டது. இனம் 1க்கு மாவட்ட ஆட்சியரிடம் கொடு.கப்பட்ட மனு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பி அந்த மனு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு அனுப்பி அதன் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்ட அறிக்கையின் நகலையும் விசாரணை அறிக்கையின் நகலையும் கேட்டு விண்ணப்பித்துள்ளார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பெறப்படும் மனுக்கள் அசலாக உரிய காவல் நிலையத்திற்கு அனுப்பப்படுவதாகவும் அம்மனுக்கள் மீது உரிய அறிக்கை காவல் துறை ஆய்வாளரால் பெறப்பட்டு மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரின் உரிய குறிப்புகளுடன் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்படுவதாகத் தெரிவித்தார். முழுக் கோப்பும் மாவட்ட ஆட்சியரிடம் இருந்து பெறப்பட்டு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு அனுப்பி மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலோ அல்லது சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திலோ மனுதாரர் குறிப்பிடும் புகார் மனுவோ அல்லது நகலோ வைத்திருக்கும் பழக்கம் இல்லை என்பதை விசாரணையில் உறுதி செய்யப்பட்டது. மனுதாரர் கேட்கப்படும் தகவல் இல்லாததால் இனம் 1க்கு தகவல் தரப்படவில்லை என்று தெரிவித்தார்.

இனம் 2ல், 4 உட்பிரிவுகளுக்கு தகவல்கள் தரப்பட்டதாகத் தெரிய வந்தது. ஒரு உட்பிரிவுக்கு தகவல் இல்லை என்று முடிவு செய்யப்பட்டது.

இனம் 2ல், உட்பிரிவு (உ) முதல் (ஏ) வரை தகவல் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தரவேண்டும் என்று முடிவு செய்து கீழ்க்கண்ட ஆணையிடப்படுகிறது.

மனுதாரருக்கு மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட மனு குறித்து உரிய தகவல்களை இனம் 2ல் உட்பிரிவு (உ), (ஊ), (எ), (ஏ) அகிய இனங்களுக்கு இவ்வாணை பெறப்பட்ட 7 தினங்களுக்குள் அளித்து அதன் விவரத்தினை ஆணைத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர், மாவட்டக்

காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம், திருவண்ணாமலை அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

**மாநில தகவல் ஆணையம்**
**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**உதவிப் பதிவாளர்**

பொதுத் தகவல் அலுவலர்
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
திருவண்ணாமலை.

பொதுத் தகவல் அலுவலர்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
திருவண்ணாமலை.

திரு ஆர் பாலகிருஷ்ணன்
220, ரோடு தெரு,
நம்பேடு கிராமம் & அஞ்சல்
போலூர் தாலுகா
திருவண்ணாமலை மாவட்டம்.